| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திருமதி. மலர்செல்வி<br>க.பெ. திரு. வீரமணி | அ.வ.எண். 282/2012 | 27.10.2025 |

2,3, 5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு. எனக்கு நன்றாக எழுத படிக்க தெரியும் என்றால் தெரியும். எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்திற்கு விபரம் சொன்னது யார் என்றால் நான் தான். அதில் உள்ள விபரங்களை நன்கு படித்து பார்த்து அதன் பிறகு தான் அதில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2,3 வாதிகள் எனது மகன்கள் என்றால் சரிதான்.

2) 4ம் பிரதிவாதி திலகவதி எனது மகள் என்றால் சரிதான். எனது மகளை இவ்வழக்கில் வாதியாக சேர்க்காமல் பிரதிவாதியாக எதிர்தரப்பில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 2,3 வாதிகளான எனது மகன்கள் மற்றும் 4ம் பிரதிவாதியான எனது மகளுக்கும் சேர்த்து தான் எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்ட இடம் எங்களுக்கு உரியது என்று பரிகாரம் கோரியுள்ளேன்.

3) வழக்கு சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும், வடக்கில் வீட்டை ஒட்டி பாதை உள்ளது, தெற்கில் 1ம் பிரதிவாதி பெருமாள் இடம் உள்ளது, மேற்கில் வடமலையின் இடம், கிழக்கில் சேப்பலையான் இடம் உள்ளது. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லை விபரத்திற்கும், நான் தற்போது குறுக்குவிசாரணையில் கூறியுள்ள நான்கெல்லை விபரத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால்

சரியல்ல, வடக்கே ஏழுமலை இடம் என்று பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் நான் எனது குறுக்குவிசாரணையில் வடக்கே குறிப்பிட்டுள்ள பாதைக்கு வடக்கே ஏழுமலை இடம் உள்ளது.

4) வா.சா.ஆ.1 பட்டாவில் 9 கூட்டுரிமையாளர்கள் பெயர் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டாவில் கண்ட கோவிந்தன்(1), கோவிந்தன்(2), ஏழுமலை(3), சேப்பலையான்(4), ரெங்கசாமி (5), நாராயணன் (6), வெங்கட்ராமன் (7), சேப்பலையான் (8), செல்லபெருமாள் (9) ஆகியோருக்கு பாத்தியப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்கள் 9 பேரும் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான்.

5) தாவா சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் வா.சா.ஆ.1 பட்டாவில் கண்ட 7 வது உரிமையாளரான வெங்கட்ராமனின் மகள் செல்லம்மாள் (எ) அழகுநாச்சியார் என்பவர் எனது மாமியாரின் மூத்த சகோதரி ஆவார், மேற்படி அழகுநாச்சியார் எனது கணவருக்கு உயில் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி வெங்கட்ராமன் 1957 ல் வா.சா.ஆ.1 பட்டாவில் கண்ட இதர கூட்டுரிமையாளர்களுக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்காமல் தனது மகளான அழகுநாச்சியாருக்கு வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

6) மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்ன சொத்து விபரம் காட்டப்பட்டுள்ளது என்பது எனக்கு நேரடியாக படித்து பார்த்து தெரியுமா என்றால் நான் நேரடியாக படித்து பார்க்கவில்லை.

மேற்படி அழகுநாச்சியம்மாள், எனது கணவருக்கு 18.08.1988 ல் ஏற்படுத்திக்கொடுத்த உயில் எனது கணவர் தயார் செய்தது என்றால் சரிதான், நானும் என் கணவரும் தான் சென்றோம், அழகுநாச்சியம்மாள் தான் எழுதிக்கொடுத்தார்.

7) மேற்படி செல்லம்மாள் (எ) அழகுநாச்சியம்மாள் மேற்படி உயில் ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்ததாக சொல்லும் தேதியில் ஒரு நாள் கழித்து 20.08.1988 ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். நானும், எனது கணவரும் தான் மேற்படி செல்லம்மாள் (எ) அழகுநாச்சியம்மாளை ஸ்ரீரங்கம் சார்பதிவக அலுவலகத்திற்கு அழைத்து சென்றோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மேற்படி செல்லம்மாள் (எ) அழகுநாச்சியம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சில காலமாக எலும்புருக்கி நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், உடல்நிலை சரியில்லாமல் இருந்தார்.

8) எந்த ஆவணத்தின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் உயிலின் அடிப்படையில். மேற்படி வா.சா.ஆ.5 உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பிறகு எனது கணவரின் காலத்தில் அவரது பெயரிலோ, அவரது காலத்திற்கு பிறகு எனது பெயரிலோ வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல், தீர்வை போன்ற ரசீதுகள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான், ஏற்படவில்லை.

9) மேற்படி வெங்கட்ராமன் 1957 ல், அழகுநாச்சியம்மாள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்த பிறகு அழகுநாச்சியம்மாள் பெயருக்கு வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டிருந்ததா என்றால் ஏற்பட்டிருந்தது. அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. வெங்கட்ராமன் பெயரிலோ, அழகுநாச்சியம்மாள் பெயரிலோ, எனது கணவர் வீரமணி பெயரிலோ, எனது பெயரிலோ வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் எக்காலத்திலும் ஏற்படவில்லை என்றால் சரிதான், தனிப்பட்ட முறையில் ஏற்படவில்லை, கூட்டுப்பட்டாவில் வெங்கட்ராமன் பெயர் உள்ளது.

10) நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் அனைத்தும் மேற்படி கூட்டுப்பட்டாவில் கண்ட 9 நபர்கள் பெயர்களில் உள்ளதையே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அழகுநாச்சியம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் அவரது பெயருக்கு ஏற்பட்ட வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் ஆவணத்தின் செல்லுதன்மை குறித்தோ, மேற்படியார் ஏற்படுத்திக்கொடுத்த வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தின் செல்லுதன்மை குறித்தோ விளம்புகை செய்யக்கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11) மேற்படி வெங்கட்ராமன் மற்றும் அழகுநாச்சியம்மாள், எனது கணவர் வீரமணி ஆகியோர் உயிருடன் இருந்த காலத்தில் தாவா பாதை பொது பாதை அல்ல என்றும், எங்களது தனிப்பட்ட பாதை என்றும், 4ம் பிரதிவாதியை தவிர, இதர பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது காலிமனையும், வழக்கு சொத்தின் பாதையும் 70 வருடங்களாக காலிமனையாகவே உள்ளது என்றால் சரியல்ல, முதலில் வீடு இருந்தது, அது 1983ல் வீடு இடிந்துவிட்டது, அதன் பிறகு காலியிடமாக உள்ளது.

12) வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர், நிலஅளவையர் உதவியுடன் பார்வையிட்டு தாக்கல் செய்த ஆணையர் அறிக்கையை

படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். நீ.சா.ஆ.3 ஆணையர் அறிக்கையில் பத்தி 10 ல், இடிந்த நிலையில் காணப்பட்ட மனு சொத்தின் காலிமனைக்கு கிழக்கு புறம் 4 மீட்டர் சந்து போல் பொது பாதை காணப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13) அதுபோல நில அளவையரும் தனது வரைபடம் நீ.சா.ஆ.5 ல் பொதுபாதை காணப்பட்டதாக என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாதை வழியாக தான் பிரதிவாதி வீட்டிற்கு செல்லமுடியும் என்றால் சரிதான்.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)